பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

27 04 2025 **SUNDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

## <u>தலைப்புச் செய்திகள்</u>

1. பஹல்காம் தீவிரவாத தாக்குதலை மேற்கொண்டவர்களும், அதனை திட்டமிட்டவர்களும் கடுமையாக தண்டிக்கப்படுவார்கள் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. பஹல்காம் தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணையை தேசிய புலனாய்வு முகமைக்கு மாற்றி உள்துறை அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

3. கடந்த நிதியாண்டில் உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து மூலம் 14 கோடியே 55 லட்சம் டன் சரக்குகள் கையாளப்பட்டு சாதனை படைக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4. நூறு ஆண்டுகளுக்கு முன்பே தமிழகத்தின் உயர்வுக்காக உழைத்தவர் பிட்டி தியாகராயர் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

5. முத்தரப்பு ஒருநாள் மகளிர் கிரிக்கெட் போட்டியில் இந்தியாவுக்கு எதிரான ஆட்டத்தில் இலங்கை முதலில் பேட் செய்துவருகிறது

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<<>>>>>

பஹல்காம் தீவிரவாத தாக்குதலை மேற்கொண்டவர்களும், அதனை திட்டமிட்டவர்களும் கடுமையாக தண்டிக்கப்படுவார்கள் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அகில இந்திய வானொலியில் இன்று ஒலிபரப்பான மக்களிடையே மனம் திறந்துபேசும் மன் கி பாத் நிகழ்ச்சியில், அவர் இவ்வாறு கூறினார்.

கடந்த 22-ஆம் தேதி நடைபெற்ற இந்த தாக்குதல் சம்பவம் நாட்டு மக்கள் அனைவரையும் துக்கத்தில் ஆழ்த்தியிருப்பதாக அவர் தெரிவித்தார்.

தீவிரவாதத்திற்கு எதிரான யுத்தத்தில் நாட்டு மக்களின் ஒற்றுமையும், ஒருமைப்பாடும் மிகப்பெரிய பலமாக விளங்குவதாக பிரதமர் குறிப்பிட்டார்.

<u>*(சவுண்ட் பைட் - மோடி (1) ----65 செகண்ட்ஸ்)*</u>

இந்த தீவிரவாத தாக்குதலுக்கு எதிரான இந்தியர்களின் ஒருமித்த குரலை உலகமே கவனித்துக்கொண்டிருப்பதாக திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - மோடி (2) ----43 செகண்ட்ஸ்)*

நாட்டின் விண்வெளித் திட்டங்கள் புதிய உச்சத்தை எட்டியதில் மறைந்த இஸ்ரோ முன்னாள் தலைவர் டாக்டர் கஸ்தூரி ரங்கனின் பங்களிப்பு என்றும் நினைவில் கொள்ளத்தக்கது என்று பிரதமர் கூறினார்.

அவருடைய வழிகாட்டுதலில் மேற்கொள்ளப்பட்ட விண்வெளித் திட்டங்களுக்கு உலக அளவிலான அங்கீகாரம் கிடைத்ததாக அவர் புகழாரம் சூட்டினார்.

*(சவுண்ட் பைட் - மோடி (3) ----58 செகண்ட்ஸ்)*

கடந்த மாதம் மியான்மர் நாட்டில் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் வகையில் ஆபரேஷன் பிரம்மா தொடங்கப்பட்டதாகவும், அக்குழுவினர் மேற்கொண்ட பணிகளால் இடிபாடுகளில் சிக்கிய பலர் மீட்கப்பட்டதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

உலகம் அனைத்தும் ஒரே குடும்பம் என்கின்ற நம் நாட்டின் பாரம்பரிய உணர்வே இத்தகைய செயல்பாடுகளுக்கு பின்னால் இருப்பதாக திரு நரேந்திர மோடி குறிப்பிட்டார்.

இயற்கை பேரிடர்களை எதிர்கொள்ளும்போது மக்கள் விழிப்புணர்வுடன் இருக்கும் வகையில் சசேத் செயலியை தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் உருவாக்கியிருப்பதாக பிரதமர் கூறினார்.

*(சவுண்ட் பைட் - மோடி (4) ----38 செகண்ட்ஸ்)*

பிரதமர் ஆற்றிய உரையின் தமிழாக்கம் சென்னை அகில இந்திய வானொலியில் இன்றிரவு எட்டு மணிக்கு மறு ஒலிபரப்பு செய்யப்படுகிறது.

மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

<<<<<>>>>>

பஹல்காம் தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணையை தேசிய புலனாய்வு முகமைக்கு மாற்றி உள்துறை அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக தேசிய புலனாய்வு முகமை வெளியிட்டுள்ள அறிக்கையில், **Baisaran** பள்ளத்தாக்குப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இந்த தீவிரவாத தாக்குதலை நேரில் பார்த்தவர்களிடம் என் ஐ ஏ அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தடயவியல் நிபுணர்களின் உதவியுடன் தாக்குதல் நடத்தப்பட்ட பகுதி முழுமையாக சோதனை செய்யப்பட்டு வருவதாகவும், அதில் கிடைக்கும் தகவல்களின் அடிப்படையில் அடுத்தக்கட்ட விசாரணை தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

கடந்த நிதியாண்டில் உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து மூலம் 14 கோடியே 55 லட்சம் டன் சரக்குகள் கையாளப்பட்டு சாதனை படைக்கப்பட்டுள்ளதாக உள்நாட்டு நீர்வழி போக்குவரத்து ஆணையம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, கப்பல் மற்றும் நீர்வழி போக்குவரத்து அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த பத்தாண்டுகளில் உள்நாட்டு நீர்வழி போக்குவரத்துக்கான நீர்நிலைகளின் எண்ணிக்கை ஐந்திலிருந்து, 111-ஆக அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2030-ஆம் ஆண்டுக்குள் உள்நாட்டு நீர்வழி போக்குவரத்தின்மூலம், 20 கோடி டன் சரக்குகளை கையாளவும், 2047-ஆம் ஆண்டில் 50 கோடி டன் சரக்குகளை கையாளவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

நூறு ஆண்டுகளுக்கு முன்பே தமிழகத்தின் உயர்வுக்காக உழைத்தவர் பிட்டி தியாகராயர் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அன்னாரது 174-ஆவது பிறந்த நாளையொட்டி முதலமைச்சர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில் இதனை குறிப்பிட்டுள்ளார்.

கல்விக்கூடங்கள், தெரு விளக்குகள், குடிநீர் இணைப்பு என சென்னை மாநகரின் வளர்ச்சிக்கு பெரும் பாங்காற்றியவர் பிட்டி தியாகராயர் என்று திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

**<<<<<>>>>>**

உலக அளவில் தீவிரவாதம் மிகப்பெரிய அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ளதை பஹல்காம் தாக்குதல் வெளிக்காட்டுவதாக அமெரிக்க புலனாய்வு அமைப்பான **FBI** இயக்குனர் திரு **''Kash Patel ;** தெரிவித்துள்ளார்.

சமூக வலைதள பதிவில் இதனை தெரிவித்துள்ள அவர், தீவிரவாதத்தை ஒடுக்குவதில் இந்தியாவுக்கு, அமெரிக்கா முழு ஆதரவு அளிக்கும் என்று கூறியுள்ளார்.

**<<<<<>>>>>**

நாட்டின் வடகிழக்கு பகுதியில் அடுத்த ஏழு நாட்களுக்கு இடி மின்னல் மற்றும் காற்றுடன் கூடிய லேசானது முதல் மிதமானது வரையிலான மழை பரவலாக பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பஞ்சாப், ஹரியானா, சண்டிகர், தில்லி, ராஜஸ்தான் மாநிலங்களில் தற்போது நிலவிவரும் அதிகபட்ச வெப்பநிலையில், அடுத்த இரண்டு நாட்களுக்கு மாற்றம் ஏதும் இல்லை என்றும், அதற்கு அடுத்த இரண்டு நாட்களில் மெல்ல வெப்பநிலை குறையக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

தமிழகம், புதுச்சேரி, காரைக்கால், யானாம், குஜராத்தின் பல்வேறு பகுதிகளில் வெப்பம் மற்றும் ஈரப்பதம் கலந்த வானிலையே நிலவும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**<<<<<>>>>>**

***விளையாட்டுச் செய்திகள்***

முத்தரப்பு ஒருநாள் மகளிர் கிரிக்கெட் போட்டியில் இந்தியாவுக்கு எதிரான ஆட்டத்தில் முதலில் பேட் செய்துவரும் இலங்கை அணி சற்றுமுன்வரை 10 புள்ளி ஐந்து ஓவரில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 38 ரன் எடுத்துள்ளது.

கொழும்புவில் நடைபெற்றுவரும் இந்த ஆட்டம் மழை காரணமாக 39 ஓவராக குறைக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, டாஸ் வென்ற இந்திய அணி, முதலில் பந்து வீச தீர்மானித்தது.

------------

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆட்டங்களில் மும்பை – லக்னோ அணியையும், தில்லி – பெங்களூரு அணியையும் எதிர்கொள்கின்றன.

-------

சுதிர்மன் கோப்பை பேட்மிட்டன் போட்டி சீனாவின் **Xiamen** -ல் இன்று தொடங்கியது.

வரும் மே மாதம் 4-ஆம் தேதி வரை இப்போட்டி நடைபெறவுள்ளது.

பி வி சிந்து மற்றும் லக்ஷயா சென் தலைமையிலான இந்திய அணி இன்று நடைபெறும் கலப்பு குழு பிரிவில் டென்மார்க்கை எதிர்கொள்கிறது.

இப்போட்டி பிற்பகல் மணி 2.30-க்கு தொடங்குகிறது.

<<<<<>>>>>